403

கதிர்முனையில்

# ஸ்வராஜ்யம்.

ஸ்ரீமதி ஸரளாதேவி சௌத்ராணியால்

ஆங்கிலத்தில் எழுதப்பெற்று

திரிச்சிராப்பள்ளி

"காங்கிரஸ்" ஜில்லா சங்க ஆபீஸ்

திரு. வி. வாஸுதேவனால்

தமிழில் மொழிபெயர்த்து

பிரசுரிக்கப்பட்டது.

திரிசிரபுரம்:
...ன் ஸ்டார் பிரஸ்.
1921.

V2, 4 N64
N21
175388

# முன்னுரை.

---

ஸ்ரீமதி ஸரளாதேவி சௌதராணியைப்பற்றி யாவரும் கேட்டிருக்கலாம். ஆங்கில பாஷைகளி லும், மற்ற பாஷைகளிலும் மகா பாண்டித்யம் அடைந்த பெரிய கவிதை யாவார்கள். அவர், தற்காலம் மகாத்மா காந்தியின் உதவி மறுத்தல் இயக்கத்தில் ஈடுபட்டு, அவர் நூல் ராட்டினத்தின் மகிமையைப் பற்றி விரித்துக் கூறியிருக்கும் தத்வங்களை நன்குணர்ந்து, தனது பட்டாடை முதலியவைகளுக்குப் பதிலாய், கையினுல் நூற்று நெசவு செய்த "கத்தர்" துணியையே உடுத்து வருகிறுர்கள். ராட்டினத்தின் உதவியாலேயே நாம் ஸ்வாராஜ்யம் பெறக் கூடுமென அவர் கூறியிருக்கும் உண்மையை நமது தென் தேச சீமான்களும், சீமாட்டிகளும், நன்குணர்ந்து, அவர் வழிபற்றி நடப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

---

இதை மொழிபெயர்த்திருக்கும் திரு. வி. வாசுதேவன் அவர்கள், முன்னரே "மகாத்மா காந்தியின் சிறை அனுபவங்களை" மொழி பெயர்த்து அது இப்பொழுது அச்சிலிருக்கிறது. இந்நூலை யாவரும் எளிதில் படிக்கும் பொருட்டு இனிய நடையிலேயே எழுதியிருக்கிறுர்.

20—4—21 நங்கவரம் லெ. துரை ஐயர்.

## "நூலிசைக் கதிர்முனையில் ஸ்வராஜ்ஜியம்."

ஸ்ரீமதி ஸரளாதேவி சௌத்ராணியால்
பால இந்தியாவில் எழுதப்பெற்று
தேசபக்தன் உப பத்திராதிபர் திரு. வி. வாசுதேவனால்
மொழிபெயர்க்கப்பட்டது.

---

குஜராத்தேசியக் கலாசாலை மாணவர்களை ஒரு வருடமாவது தங்கள் பள்ளி வாழ்வை நிறுத்திவிட்டு தினம் ஆறுமணி நேரம் நூல் நூற்கும் தொழிலை ஏற்றுக்கொள்ளும்படி மகாத்மா காந்தி அழைத்த முரசின் தொனி என் காதிலும் விழுந்தது; அவர் வங்காள இளைஞர்களுக்கு எழுதியுள்ள விஞ்ஞாபனத்தையும் நான் படித்திருக்கிறேன். உங்களில் ஒருவளாகிய—வங்காளத்தின் புதல்வியாகிய—என் மனதிற்கு எட்டிய வரையில் அவைகளின் முழு தாத்பர்யத்தையும் உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பிரிட்டிஷார்கள் அலெக்ஸாண்டர், நெபோலியன் போனபார்ட் இவர்களைப்போல் படையெடுத்து வாராமல், ஒரு வியாபாரக் கூட்டத்தாராகவே இந்தியாவிற்கு வந்தனர். ஆதியில் ஒரு ஏகாதிபத்திய நாட்டை ஸ்தாபிப்பது என்ற நோக்கமே அவர்களுக்குக் கிடையாது; ஆனால் ஒரு கைத்தொழிலை நசித்தலே அவர்களின் எண்ணமாகும். நூல் ராட்டினத்தை அழித்து அதை யெரித்த சாம்பற் மேலே பிரிட்டிஷ் ராஜ்ஜீயத்தின் அஸ்திவாரம் கட்டப்பட்டது. தொழிற்சாலை

களை விர்த்திசெய்யும் ஆங்கில கம்பேனிகளின் பங்குக்காரர்களையும், நிர்வாகக்காரர்களையும் பணத்தில் கொழுக்கச் செய்யும் பொருட்டு, ஒரு எளிய சாதாரணத் தொழிலைக் கொலை செய்தழித்ததுடன், இந்தியர்களின் பாக்கியத்தையும், இன்பங்களையும் களவாடினார்கள். ஆங்கில சரித்திரக்காரர்களே கூறுவது போல், பிரிட்டிஷ் கைத்தொழிலாளன் தன்னால் சரிசமானமாய் போட்டி செய்து வெல்லக் கூடாத வங்காள நெசவுக் காரனை, ராஜீய அநீதிகளைக் கையாண்டு கீழே மிதித்து, கடைசியாய் அவன் மென்னியையும் பிடித்து கொலைபுரிந்து விட்டான். இதுவே இந்தியாவின் சுயேச்சை முடிவதின் ஆரம்பமாகும்.

இன்னுஞ் சற்று மேற்சென்று இதை ஆராய்வோம்.

நாளடைவில், பிரிட்டிஷ் அரசாட்சியின் வியாபார முறை, ஆங்கில வியாபாரஸ்தலங்களில் நாம் லாபத்திற்காக அனுப்பிக்கொண்டிருந்த நமது பருத்தி, பட்டுத்துணிகளை, ஆங்கே போகவொட்டாமல் செய்தது. இந்தியச் சரக்குகள்மேல் அநியாயமான, தாங்கமுடியாத வரிகளைச் சுமத்துவதினாலும், அவைகளை வரவொண்ணாமல் தடுப்பதினாலும், ஆங்கிலச் சரக்குகள் காப்பாற்றப்பட்டன.

ஏனெனில், “ இவ்விதம் செய்திராவிடில், இத்தகைய விலக்குத் தீர்வைகளும், கட்டுப்பாடுகளும் ஏற்பட்டிராவிடில், பெய்ஸ்லி, மான்செஸ்டர் முதலிய

இயந்திரசாலைகள் (சிலநாட்களுக்கு முன் வில்லிங்டன் நூற்றெசவுஇயந்திரசாலை சென்னையில் அடைபட்டது போல்) ஆரம்பத்திலேயே மூடப்பட்டிருக்கவேண்டியதுதான்: மேலும் நீராவி பலத்தினால்கூட அவைகளை மறுபடியும் துவக்குவது அசாத்தியம். இந்தியத் தொழிலாளியின் வியாபாரத்தைக் காவு கொடுத்தே அவைகள் விர்த்திசெய்யப்பட்டன. இந்தியா சுயேச்சைபெற்ற நாடாயிருந்திருந்தால், பிரதிக்குப் பிரதி செய்வதுடன், பிரிட்டிஷ் சரக்குகள்மேல் இவ்வித விலக்குவரிகளையும் விதித்து, பிரிட்டிஷ் சரக்குகள் இந்தியாவில் வரவிடாமல் தடுத்துத் தன்னுடைய செழிப்பான கைத்தொழிலையும் அழியாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கக்கூடும். இவ்விதம் சுயரக்ஷணைக்காகக் கூட இந்தியாவால் ஒன்றுஞ் செய்யக்கூடாமல் தடுக்கப்பட்டது. பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்கள் பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பின்பாகத்திலிருந்து சுயேச்சை வியாபார (Free trade)க் கொள்கைகளைத் தழுவினர்; இந்தியாவின் தொழிலபிவிர்த்தியை அழித்துத் தங்கள் தொழில்களை வளர்க்கும் வரையில், பிரிட்டிஷார் இத்தகைய பொருளாதார முறைகளைக் கையாட மறுத்துவிட்டனர். அதற்குப் பின்னரே, பிரிட்டிஷார் சுயேச்சை வியாபாரிகளானதுடன், இதர நாட்டாரையும் அம்முறைகளைக் கைப்பற்றும்படி கேட்டனர். ஆனால் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் உள்பட, மற்ற நாடுகளுக்குத் தங்களுக்கு உசிதமெதுவென நன்றாய்த் தெரியும்; அவர்கள் இப்

பொழுது தங்கள் தொழில்களைக் காப்பாற்றும் பொருட்டு, வரிகள் விதித்து, அவைகளை வளர்க்கின்றனர். ஆனால் இந்தியாவிலோ, இந்தியக்குடி மக்களின் தொழில்களை யெல்லாம், ஏராளமான வரிகளை விதித்து அழித்ததுமல்லாமல், (முகத்திலறைந்துவிட்டுக் காறியும் உமிழ்ந்தாற்போல்.) இப்பொழுது மறுபடியும் அத்தொழில்கள் தலைக்காட்டா வண்ணம், சுயேச்சை வியாபார முறைகளை பாரதமாதாவின் மீது சுமத்தியிருக்கின்றனர்.''

நெசவுக்காரர்களை அழித்த கையோடு பெருத்த நிலத்தீர்வைகளைப்போட்டு நிலத்தை உழுது சாகுபடி செய்யுங் குடியானவர்களின் நாசமும், (அநேக இடங்களில் இரு தொழிலையும் ஒருவரே செய்துவந்திருந்தனர்) பின்பற்றிற்று. உள் நாட்டு வியாபாரமும், ஆங்கில வியாபாரிகள் குத்தகைபோல் ஏற்படுத்திக் கொண்டு விட்டதுடன், கொடுமையாய் இம்சை செய்ததாலும், க்ஷீணித்துப் போய்விட்டது. அன்னிய முதல் போட்டு, அன்னிப் பங்குக்காரர்களுக்கே லாபமும் வட்டியும் அளிக்கக்கூடிய ரயில் பாதைகள் போட்டதால், பல்லாயிரக் கணக்கான படவுக்காரர்களுடையவும், படவு கட்டுகிறவர்களுடையவும், வண்டிகள் ஓட்டுகிறவர்கள், செய்பவர்கள், இவர்களுடையவும் பிழைப்புக் கெட்டது. (ஆங்கிலர்கள் ரயில் போட்ட நன்மையைப் பற்றி குதூகலிக்கும் சில அறிவிலிகள் இதை கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்—திரு. வி. வா.) பிரிட்டிஷ் அதி

காரிகள், இவ்வுலகிலேயே கப்பல் வியாபாரப்போக்கு வரவு சாதனங்களுடைய வேறு நதி யொன்றும் கங்கையைப் போல் கிடையா தென்பதை அறிந்து கொண்டார்கள்; 1780ம் வருடத்திலேயே 30000 (முப்பதினுயிரம்) படவோட்டிகள் கங்கை தீரத்தில் தங்கள் ஜீவனத்தை நடத்திக் கொள்ள இயன்றது; அது முதல் அந்தத் தொகை அதிகரித்தே வந்தது. ஒரு பொழுதும் காலியாயிராமல், சர்வகாலமும், படவுகள் மேலுங்கீழுமாய்ப் போய்க்கொண்டிருந்த வண்ணமாயிருந்தது, ஒவ்வொரு அன்னியனையும் பிரமிக்கச் செய்தது; இம்மகா நதியினுல் வியாபாரம் விர்த்தியாவதுடன், இவ்வளவென்று கணக்கிடக்கூடாமல் பிரயாணிகளுக்கும் ஏற்பட்ட சௌகரியங்களையும், நினைக்குங்கால் ஒவ்வொரு அன்னியனும் மயங்கினுன். இந்திய பூமியின் குழந்தைகளாகிய நமக்கு இப்புண்ணிய நதியால் ஏற்பட்டுக்கொண்டிருந்த பயனையும், லாபத்தையும் வேருடன் களைந்ததோடு, பிரிட்டிஷ் வியாபாரக் கொள்ளையையும், இந்திய அரசாங்கத்தின் சைன்யச் செருக்கையும், மேற்படுத்தும் பொருட்டு, பிரிட்டிஷ் வர்த்தகர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ரயில் பாதைகளுக்கு, இந்திய வரிப்பணங்களிலிருந்து பொருளுதவியும் ஊர்ஜ்ஜிதமாய், செய்வதாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆங்கில அதிகாரிகளில் யோக்கியமாயுள்ள ஒருவர்,
பின்வருமாறு கூறியுள்ளார் :—

"வங்காள ஜனங்கள் முன்னர்க்கொடுங்கோலுக்குட் பட்டிருக்கின்றனர்; ஆனால் அவர்கள் ஒவ்வொரு கிராமச் சந்தையையும், ஒவ்வொரு நெசவுக்காரன் தறிகளையும், சிதைக்கக்கூடிய கொடுமையால், ஒரு பொழுதும் வதைக்கப்படவில்லை. சில்லரை அதிகாரம் பெற்ற அதிகாரியின், யதேச்சையான கட்டளைகளுக்கு அவர்கள் கட்டுப்பட்டிருக்கின்றனர்; ஆனால் தங்கள் தொழில்களையும், வியாபாரங்களையும், உயிர்களையுமே பாதிக்கக் கூடிய ஒரு முறையின் கீழ் அகப்பட்டு ஒருநாளும் அவர்கள் கஷ்டப்படவில்லை. ஆங்கிலர்கள் அவர்களுடைய கைத்தொழில்களின் உற்பத்தி ஸ்தானத்தை குலைத்தனர்; அவர்களுடைய திரவிய ஊற்றலையும் வற்றும்படி செய்தனர்."

மேலே விளக்கியிருக்கும் பிரிட்டிஷார் இந்தியாவில் கைப்பிடித்துவரும் முறையிலிருந்து, இந்திய ஜனங்கள் அன்னிய ஆட்சியிலகப்பட்டுத் தவிப்பதும், அவர்கள் ஏழ்மைப்பட்டு சிரமதிசையிலிருப்பதும், ஒரு மாகாணத்திலேனும் பயிர்கள் பலன்தாராமல் ஒரு வருஷம் பஞ்சமேற்படின் நாடுமுழுவதும் பசிப்பிணியால் ஆயிரக்கணக்காய்க் குடிகள் மாய்வதும், இவையெல்லாம் நமது தொழில் அபிவிர்த்தியை நாம் இழந்து, தொழில்கள் அழிக்கப்பட்டதின் காரணம் பற்றியே, என எளிதில் கண்டுகொள்ளலாம்.

ஆனால் இந்தியாவின் தொழில் பலம், விசேஷமாய் அதனுடைய தறிகளாலல்லாமல், முக்கியமாய்க் கை ராட்டினங்களாலேயே ஏற்பட்டது என்பதை கவனித்தல் வேண்டும். டெக்கா நகரின் தறிகள் ஜப்பான், இங்கிலாந்து இவ்வன்னிய நாடுகளில் இயந்திரங்களில் செய்யப்படும் நூல்களினால், இன்னும் நடந்துகொண்டு வருகின்றன. இந்தியாவில் நூல் நூற்றுக்கொண்டிருந்த திவ்ய கரங்களே, தேசமுழுவதும் உணவு, சுகம், சுயேச்சை இவைகளை யளித்துக் கொண்டிருந்தன. நூலிசைக்கதிரின் முனையிலேயே இந்தியா தனது சுவாதந்தர்யத்தை மறுபடியும் அடையக் கூடும். நமது தேசீய யுத்தவீரர்கள் தங்கள் தற்கால வழிகளிலிருந்து பின்னடைந்து, ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் தங்களறிவின்றியே தாங்கள் விட்டகன்ற லாபகரமானதும், அனுகூலமானதுமான தொழிலைத் திரும்பவும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். நமது கையினாலேயே நூற்கப்பட்டதும், நெய்யப்பட்டதுமான துணிகளையே, உடுப்பதினால், ஒரு அன்னிய யஜமானனால் நமக்குக் குரூரமாயும், அநியாயமாயும் மறுக்கப்பட்ட, நமது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளும் பாத்தியம், நிச்சயமாய்க் கிடைத்துவிடுமென்பதில் ஐயமில்லை. அழிந்துபோன ஒரு தொழிலை மறுபடியும் உத்தாரணஞ்செய்து காப்பாற்றுவதும், நம்மால் கைவிடப்பட்ட ஒரு வித்தையை புதிப்பிப்பதும், இந்திய வீடுகளை மறுபடியும் பழய படி அமைப்பதும், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு

வரும் இந்தியக் கரங்களால் செய்யப்பட்ட உடைகளை தரிக்கும்படி செய்விப்பதும் இவைகளே ஸ்வாராஜ்ஜியத்தின் அரிச்சுவடி யாகும் ;—அகாமும் ஆயுதமுமாகும்.

ஆங்கிலக் கவி யொருவர் "எங்கு பார்த்தாலும் தண்ணீர்! குடிக்கமட்டும் ஒரு துளிகூட யில்லை" என்று கூறியதுபோல் எங்கு பார்த்தாலும் துணிமயமாகவே, மூட்டை, மூட்டைகளாகயிருக்கிறது ; பல பல நிறங்களும், நேர்மையும், அளவுமுள்ளதான துணிகளெல்லாம் நம்மை சுற்றியிருக்கின்றன. ஆனால் ஒரு முழத் துண்டுகூட நமது சொந்தமானது என்று கூற இடமில்லையே! இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் உலக முழுதும், பலவிடங்களுக்கும், நமது வஸ்திரங்களே சென்று கொண்டிருந்தன. இன்றைக்கோ, நாம் நமதுநிர்வாணத்தை மறைத்துமானத்தைக் காப்பாற்றிக்கொள்ள அன்னிய நாடுகளையே நோக்கி, பிச்சைக்காரர்களைப்போல் நிற்கவேண்டியிருக்கிறது. ஒரு கெட்ட அரசாங்கமானது, துற்சாதனன் துரௌபதியை மானபங்கம் செய்யும் பொருட்டு துரியோதனன் சபையில் சேலையை உரித்தாற்போல், உலகின்கண் பாரததேவியை அவமானப்படுத்த, அவளை நிர்வாணமாக்க யத்தனிக்கிறது ; அவளது மானத்தைக் காக்க இன்னும் அவகாசமிருக்கிறது. பாரத புத்திரர்கள் அழகிய சக்கிரத்தையே, நமது தேசிய சக்கரத்தையே நம்ப

வேண்டும். உலக சம்ரக்ஷகராகிய ஸ்ரீ சக்கிரபாணியே (விஷ்ணு)— சம்காரியாகிய சூலபாணி (சிவன்) யின்றி— உங்கள் ஒவ்வொருவர் ஹிருதயத்திலுமுள்ள ஸ்ரீ கிருஷ்ணனே, நமது நாட்டை தற்கால நெருக்கடியிலிருந்து காப்பாற்றக் கூடும். (உதவி மறுத்தல் அஹிம்ஸா தர்மத்தை மேற்கொண்டு சுய நம்பிக்கையுடன் சுயரக்ஷணையை ஆதரிப்பதால் உலக சம்ரக்ஷகராகிய ஸ்ரீ விஷ்ணு சக்கிரபாணியாலல்லாமல், உலக சம்காரம் செய்யும் சூலபாணியாகிய ஸ்ரீ சிவபெருமானால், நமது தேசத்தைத் தற்காலம் பரிபாலிக்க இயலாது என்பது பொருள். திரு. வி. வா.)

அழிந்துபோன இந்நூல்நூற்கும் வித்தையை மறுபடியும் உயிர்பிக்க என் தேச முழுவதும் எல்லோரும் நூற்க வேண்டுமென்று சிலர் கேட்கக்கூடும். அனுபவமும், நூற்றுக் கணக்கான வருடப் பயிற்சியும், சாமார்த்தியமும் பெற்ற நெசவுகாரர்களுக்கு மட்டும் நாம் இப்பொழுது மனு செய்து வேண்டிக் கொண்டால் போதாதா?

இதற்கென்ன பதிலெனில்:—இவ்வருடத்திற்குள் அன்னிய சரக்குகளை நீக்கி அவற்றிற்குப் பிரதியாய் நம் துணிகளையே உடுப்பதற்காக அதிகமான உடைகளை நெய்வதுடன், நமது வெகு நாள் பாவங்களுக்கும் இதுவே பிராயச்சித்தம், பரிகாரமாகும். ஏனெனில், நமது முன்னோர்களே, குமாஸ்தாக்களாயும் ஆங்கிலக் கும்பேனிகளின் ஏஜண்டுகளாயும் இன்னும்

பலவித சில்லரை அடிமைத் தொழிலாளர்களாயும், நம்மை வதைத்தவர்களுக்கு வலக்கைபோல்விளங்கி வந்தனர். அவர்கள் உதவியின்றி, இவ்வன்னியர் தமது குரூர செய்கைகளையும், கொள்ளைகளையும் சாதித்துக்கொண்டிருக்க முடியாது. இவ்வுண்மை உங்கள் மனதில் நன்கு பதிவதற்கு, ஒரு ஆங்கில வர்த்தகர் அக்காலத்தில் நடந்த அநியாயங்களைக் குறித்து எழுதியிருப்பதையே உங்களுக்கு உரைக்கிறேன்.

"தற்காலம் உள்நாட்டில் நடக்கும் வியாபார முறையும், விசேஷமாய் ஐரோப்பாவுடன் கும்பேனியார் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களும், ஜனங்களை ஹிம்சிப்பதையேத்தாங்கியிருந்து வருகின்றன என்று இப்பொழுது உண்மையுடனுரைக்கலாம், இவ்வித ஹிம்சையின் கொடுமை ஒவ்வொரு நெசவுகாரனாலும், தொழிலாளியாலும், வெகு கடுமையாய் உணரப்படுகிறது; செய்யப்படுகிற ஒவ்வொரு வஸ்துவையும் ஆங்கிலர்கள் குத்தகையாய் செய்துகொண்டுவிடுகிறார்கள்; தங்களது கறுத்த இந்திய குமாஸ்தாக்களையும், பனியர்களையும் (வட இந்தியாவில் வைசியர்களுக்குச் சமானமானவர்கள்) கொண்டு, இவ்வாங்கிலர்கள், ஒவ்வொரு தொழிலாளியும் எவ்வளவு சரக்குக் கொடுப்பதென்றும், அதற்கவன் எவ்வளவு பொருள் பெறுகிறதென்பதையும், நிர்ணயம் செய்து விடுகிறார்கள். இந்த குமாஸ்தாக்கள், தொழிற்சாலை இருக்கும் ஊர்களுக்கு வந்தவுடன்

கச்சேரி யென்று ஒரு வாசஸ்தலம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள் ; இந்த கச்சேரிக்கு தங்கள் சேவகர்கள் மூலமாய் தரகுகாரர்களையும், நெசவுகாரர்களையும் வரவழைக்கின்றனர் ; இந்நெசவுகாரர்களுக்குத் தங்கள் தங்கள் யஜமானர்களால் தங்களிடம் அனுப்பப்பட்டிருக்கும் பொருளிலிருந்து, கொஞ்சம் முன் பணம் கொடுத்து விட்டு, இன்னநேரத்தில் இன்ன விலைக்கு இவ்வளவு சாக்குக் கொடுப்பதாக அவர்களிடம் ஒரு வாக்குறுதிப் பத்திரம் வாங்கிக்கொள்கிறார்கள். இவ்வாக்குறுதிப்பத்திரத்தில் கையொப்பமிட அந்த எளிய நெசவுக்காரர்களுக்கு சம்மதமிருக்க வேண்டுமென்பது அனாவசியம் ; ஏனெனில் இந்த குமாஸ்தாக்கள், கும்பேனியாரின் பணத்தை வாங்கிச் சேவகஞ் செய்வதால், தாங்களிஷ்டப்பட்டபடி, நெசவுக்காரர்கள் வாக்குறுதி அளிக்கும்படி செய்கிறார்கள் ; நெசவுக்காரர்கள் இப்பொருளை யேற்றுக் கொள்ள மறுத்த பொழுது, பணத்தை அவர்கள் இடுப்பில் கட்டிவிட்டு அவர்களை சவுக்கால் அடித்த குரூர சம்பவங்களும் நமக்குத் தெரியும். இந்நெசவுகாரர்களிற் பலர், கும்பேனியின் இன்ன குமாஸ்தாக்களுக்காகத்தான் வேலை செய்யவேண்டுமெனப்பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அடிமைகள் போல் ஒரு குமாஸ்தாவின் கீழிருந்து மற்றொரு குமாஸ்தாவிற்கு மாற்றப்படுவதும், வரிசையாய் ஒருவர் பின் ஒருவராய் வரக்கூடிய ஒவ்வொரு குமாஸ்தாவின் கொடுமைகளுக்கும், போக்கிரித்தனத்திற்கும் உடன்பட

வேண்டியிருக்கிறது. இந்த இலாகாவில் நடக்கும் அயோக்கியத்தனத்தையும், அநியாயத்தையும் சாதாரணமாய் ஒருவரால் நினைத்துப் பார்க்கக்கூட இயலாது ; எல்லாம் எளிய நெசவுக்காரனை ஏமாற்றுகிறதிலேயே முடிகிறது ; ஏனென்றால், சாதாரணமாய்ப் பொது பஜாரிலும், சந்தையிலும் கிடைக்கக் கூடிய விலைக்கு 100க்கு 15, சில சமயம் 40 மடங்கு கூட குறைதலாகவே, இக்குமாஸ்தாக்களும், அவர்களுக்கு உடந்தையாய், துணிகளுக்கு மதிப்புப் போடுகிறவர்களும், இந்நெசவுக்காரர்கள் செய்யும் வஸ்திரங்களுக்கு விலை போடுகின்றனர். தங்கள்மேல் கும்பேனியின் ஏஜண்டுகளால் சுமத்தப்பட்ட முச்சிலிகா பிரகாரம் நடக்கத்தவறியதற்காக, இதனால் கும்பேனியாருக்கு ஏற்படும் பணக்குறைவிற்கு ஈடு செய்யும் பொருட்டு, இச்சேணியர்களின் சரக்குகளை ஜப்தி செய்து ஏலம் போட்டுவிடுகின்றனர். நகோதார்கள் என்னும் பட்டுவேலை செய்கிறவர்களுக்கும் இவ்வித கஷ்டங்களேற்பட்டு, இனிப் பட்டுநூல் வேலை செய்யாமலிருக்கும் பொருட்டு, அவர்கள் தங்கள் கைபெருவிரல்களையே தாங்களே வெட்டியெறிந்திருக்கும் அநியாயங்களையும் நாமறிவோம்.”

குடியானவர்களும் இவ்வித அக்கிரமங்களுக்குக் கீழ் படியவேண்டியிருந்தது.

குமாஸ்தாக்கள் சரக்குகளுக்காகக் குடியானவர்களை நிர்பந்திப்பதால், பலமுறைகள் தங்கள் நிலங்களை

விர்த்தி செய்யவாவது, தீர்வைகளை செலுத்தவாவது இக்குடியானவர்களுக்கு முடியாமல் போய்விடுகிறது; இவர்கள் ஒருபுறம் இப்படி நெருக்க, மற்றொருபுறம் (ரெவன்யூ)—வரி வசூலிக்கும் இலாகா சிப்பந்திகளும் தொந்தரை செய்ய, பலவேளைகளில் இவ்வேழைக் குடியானவர்கள் தங்கள் மக்களையே விற்று வரியைச் செலுத்திவிட்டு, நாட்டை விட்டு ஓடும்படி நேரிடுகிறது.

(Custom House) கப்பல் சுங்க இலாகாவில் நடக்கும் அதிக்கிரமங்களைப் பற்றி ஒரு ராஜப்பிரதிநிதி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் :—

"ஒவ்வொரு வியாபாரியும், தொழிலாளியும், வர்த்தகனும், தனது சொத்தையும், தனது சொந்த சுகத்தையும், சில சமயங்களில் தனது குடும்ப ஸ்திரீகளின் மானத்தையும் காப்பாற்றும் பொருட்டு, அரசாங்க உத்தியோகஸ்தர்களுடன் சட்ட விரோதமான காரியங்கள் செய்வதில் ஈடுபடவேண்டி நேர்கிறது" என்றெழுதியிருக்கிறார்.

இவ்விதம் பிரிட்டிஷ் அரசாட்சியால் இந்தியாவின் தேசிய நற்குணங்களுக்கும், நீதிகளுக்கும் ஏற்படும் இகழ்ச்சியான நிலைமை, நமது தேசிய திரவியத்திற்கும், இன்பத்திற்கும் நேரிடும் கெடுதிகளைவிட, இன்னும் விசனிக்கத் தக்கதாயிருக்கிறது. இவ்வித அநீதிகளால் ஏற்பட்டிருக்கும் கட்டுகளை நாம் அறுத்

தெறியவேண்டும். ஒவ்வொரு முறை ராட்டினத்தில் ஒருசுற்று சுற்றும்பொழுதும், இக்கட்டு அவிழ்க்கப்படல்வேண்டும். இவ்விதமே நமது தேசத்தினர் தங்களை பரிசுத்தப்படுததிக் கொள்ளலாம். ராட்டினமாகிய நமது பீரங்கியே இங்கிலாந்தினைல் நமது ஸ்தூல சரீரத்திற்கும், சூக்ஷ்ம ஆத்மாவிற்கும் இயந்திர சக்தியால் செய்யப்படும் அழிவை எதிர்த்து நிற்கக்கூடிய, இரத்தஞ் சிந்தாத இராஜீயப் புரட்சியை, நிலை நாட்டக் கூடும். இதுவே பெரு நோக்கங்களையும், தீர்க்க தரிசத் தன்மையையுமுள்ள, நமது தேசிய குருவாகிய மகாத்மா காந்தி அறையும் முரசின் தத்துவமாகும்.

வந்தேமாதரம்.